யார் துறையிலிருந்தான போட்டி, நடவடிக்கை மட்டங்களைக் குறைவடையச் செய்ததை அரசதுறை வர்த்தக நிறுவனங்கள் உணர்ந்து கொண்டன. கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையமும் சந்தைப்படுத்தல் திணைக்களமும் நுகர்வோர் விலைகளின் உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கும் அத்தியாவசியப் பொருட்களின் கிடைத்தலையும் நீதியான வழங்கலையும் உறுதிப்படுத்துவதற்கும் தேவையான முக்கிய நிறுவனங்களாக விளங்கின. சிறப்பாக சந்தைப்படுத்தல் திணைக்களத்தின் மறுசீரமைப்பு காய்கறிகள் உட்பட நுகர்வோர் வடிவங்களின் விலைகளைக் குறைப்பதில் முக்கிய செல்வாக்கினைக் கொண்டிருந்தது. 1984 இல், நுகர்வோர் விலைகளைப் பேணுவதற்கு உதவுவதில் சந்தைப்படுத்தல் திணைக்களம் அதிகளவு ஆற்றல்மிக்க பங்கினை வகித்தது. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தினால் தொழிற்படுத்தப்பட்ட தாங்கிருப்பு, முக்கிய நுகர்வு விடயங்களின் கிடைத்தலைப் பேணுவதற்கும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைந்த மட்டத்தில் பேணுவதற்கும் உதவியளித்த காரணியாகும்.

உள்நாட்டு வர்த்தகத்தில் கூட்டுறவு நிலையங்களின் பங்கு அரிசி, சீனி, மா, உணவு முத்திரைத் திட்டத்தின் கீழ் நுகர்வுப் பொருட்கள் ஆகிய அடிப்படை உணவு வகைகளின் வழங்கலை உறுதிப்படுத்தும் முக்கியமானதொன்றாகத் தற்போது விளங்குகின்றது. அதனால் அவற்றின் இலாபங்கள் தொடர்ந்தும் குறைந்தளவாகக் காணப்பட்டது. எனினும், கூட்டுறவு நிலையங்களின் அதிகளவு முக்கியத்துவத்தினைப் பிரச்சினைகள் அல்லது உள்நாட்டுக் குழப்பங்களின்போது நாடு முழுவதிலும் அத்தியாவசியப் பொருட்களின் திறமையான வழங்கல் அவசர தேவையாக விளங்கிய வேளையில் கண்டுகொள்ளக் கூடியதாக இருந்தது. எனவே, உள்நாட்டு வர்த்தகக் கொள்கை நிதி அல்லது ஏனைய வசதிகளைக் கூட்டுறவு நிலையங்களுக்கு வழங்குவதன் மூலம் அவைகளை ஆற்றல்மிக்கவையாகத் தொடர்ந்தும் இயங்கச் செய்வதில் நோக்கங்கொண்டதாக விளங்க வேண்டும்.

**சுற்றுலா**

1984 இல் சுற்றுலாத் தொழில் நடவடிக்கைகள் 1983 இல் காணப்பட்ட வீழ்ச்சியிலிருந்து ஓரளவுக்கு மீட்சியடைந்ததைக் காட்டின. சுற்றுலாப் பயணிகள் வருகை, சுற்றுலா இரவுகளின் எண்ணிக்கை, அறையில் தங்குதல், வருவாய்கள் போன்ற முதன்மை செயலாற்றக் குறிகாட்டிகள் இக்கைத்தொழிலின் நடவடிக்கைகள் 1982, 1983 மட்டங்களைவிட மிகவும் தாழ்ந்து காணப்பட்டபோதிலும் இக்கைத்தொழிலில் மீட்சி ஏற்படுவதைக் காட்டின. 1984 இன் இறுதியில் சுற்றுலாப் பயணிகள் வருகையில் அதிகரிப்பை ஏற்படுத்தியதன்மூலம் 1984 இல் சாதகமான போக்கிற்கு மேற்கு நாடுகளின் பொருளாதார மீட்சியும் உதவியது. எனினும், முக்கியமாகத் தீர்வையற்ற கடைகளில் பொருட்கள் வாங்குவதற்காக இந்திய உபகண்டத்திலிருந்து வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை இந்திய அரசு அவர்களுக்கு வழங்கும் தீர்வையற்ற பொதிப் படிகளின் மீது கட்டுப்பாடுகளை விதித்ததனால் அதிகளவில் வீழ்ச்சியடைந்தது.

1984 இல் மொத்தச் சுற்றுலாப் பயணிகளின் வருகை 317,734 ஆக விளங்கி 1982 இன் மட்டத்தினைவிட 22 சதவீதம் குறைவாகவும் 1983 இன் மட்டத்தினைவிட 6 சதவீதம் குறைவாகவும் காணப்பட்டது. மேற்கு ஐரோப்பா, வட அமெரிக்கா, அவுத்திரலாசியாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 1983 மட்டத்தினைவிட அதிகரிப்புக்களைக் காட்டின. இலங்கையின் முதன்மைச் சந்தையாக விளங்கும் மேற்கு ஐரோப்பாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 1984 இல் 8 சதவீதத்தால் 191,070 இற்கு உயர்வடைந்தது.

இதேபோல் மேற்கு அமெரிக்கா, அவுத்திரலாசியா ஆகிய ஏனைய முக்கிய சந்தைகளிலிருந்தான வருகைகள் முறையே 15,020 ஆகவும், 11,970 ஆகவும் விளங்கி முன்னைய ஆண்டினைவிட 2 சதவீதம், 13 சதவீதம் கூடியதாகக் காணப்பட்டன. இதற்கு மாறுக ஆசியப் பிராந்தியத்திலிருந்தான வருகைகள் முக்கியமாக இந்தியாவிலிருந்தான பயணிகள்வருகையில் ஏற்பட்ட அதிகளவு வீழ்ச்சி காரணமாக 28 சதவீதத்தால் குறைவடைந்தது. இன்பப் பயணிகளின்வருகைகள் அதாவது 24 மணித்தியாலங்களுக்குக் குறைவாக நாட்டில் தங்கும் தற்காலிக வருகையாளர்கள் (இடைப்போக்கிலுள்ள பயணிகள் நீங்கலாக) 1983 இன் 7,208 உடன் ஒப்பிடுகையில் 1984 இல் 8,638 ஆக விளங்கி 20 சதவீத கணிசமான அதிகரிப்பைக் காட்டியது.

சுற்றுலாத்துறை நடவடிக்கைகளுக்காகச் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளைவிடச் சிறந்த குறிகாட்டியாகக் கருதப்படும் சுற்றுலாப் பயணிகளால் செலவிடப்படும் இரவுகளின் மொத்த எண்ணிக்கை 1984 இல் 2,818,694 ஆக விளங்கி 1983 இன் மட்டத்தினைவிட 11 சதவீதம் குறைவாகக் காணப்பட்டது. 1982 உடன் ஒப்பிடுகையில் இது 22 சதவீதக் கணிசமான வீழ்ச்சியைக் காட்டியது. சுற்றுலாப் பயணி ஒருவரின் சராசரி தங்கும் காலம் 1983 இன் 10 இரவுகளிலிருந்து 1984 இல் 9 இரவுகளுக்கு வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 1.34

**சுற்றுலாப் புள்ளி விபரங்கள் 1983 – 1984**

| விடயம் | 1983 | % மாற்றம் 1982 மேல் | 1984(அ) | 1983 மேல் % மாற்றம் |
|---|---|---|---|---|
| 1. சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் ... | 337,530 | – 17.1 | 317,734 | – 5.9 |
| 2. இன்பப் பயணிகளின் வருகைகள் ... | 7,208 | 8.7 | 8,638 | 19.8 |
| 3. பயணி இரவுகள் ('000) ... | 3,179 | – 21.5 | 2,819 | – 11.3 |
| 4. மொத்த சுற்றுலாப் பெறுகைகள் | | | | |
| 4.1 ரூபா பத்து இலட்சங்களில் ... | 2,896.1 | – 5.1 | 2,737.8 | – 5.5 |
| 4.2 டொலர் பத்து இலட்சம் ... | 126.9 | – 13.4 | 105.3 | – 17.0 |
| 4.3 சி.எ.உ. பத்து இலட்சம் ... | 115.1 | – 13.3 | 105.0 | – 8.7 |
| 5. நோக்கங்களின்படியான வரவுகளின் எண்ணிக்கை | | | | |
| 5.1 களியாட்டம் ... | 306,626 | – 15.1 | 300,336 | – 2.1 |
| 5.2 தொழில் சம்பந்தமானவை ... | 19,378 | – 9.5 | 10,934 | – 43.6 |
| 6. பிரதேச அடிப்படையிலான வருகைகளின் எண்ணிக்கை | | | | |
| 6.1 மேற்கு ஐரோப்பா ... | 176,310 | – 23.4 | 191,070 | 8.4 |
| 6.2 ஆசியா ... | 124,620 | – 7.8 | 89,736 | – 28.0 |
| 6.3 வட அமெரிக்கா ... | 14,686 | – 5.4 | 15,020 | 2.3 |
| 7. மொத்த தொழில் வாய்ப்பு ... | 53,608 | – 16.6 | 59,462 | 10.9 |
| 7.1 நேரடியாக ... | 22,374 | – 16.4 | 24,595 | 9.9 |
| 7.2 மறைமுகமாக ... | 31,234 | – 16.7 | 34,868 | 11.6 |

* தற்காலிகமானவை. மூலம்: இலங்கை சுற்றுலாச் சபை.

கடந்த காலங்களைப்போலவே, மேற்கு ஐரோப்பாவே முதன்மைச் சுற்றுலாச் சந்தையாக விளங்கி 1984 இல் சுற்றுலா வருகைகளின் மொத்த வருகைகளில் 60 சதவீதத்திற்கு வகை கூறியது. இது 1983 இன் 52 சதவீதத்துடன் ஒப்பிடத்தக்கது. இரண்டாவது பெரிய சந்தையாக விளங்கும் ஆசிய சந்தையின் பங்கு 1983 இன் 37 சதவீதத்திலிருந்து 1984 இல் 28 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததற்கு முக்கியமாக இந்தியாவிலிருந்தான வருகைகள் 53 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்ததே காரணமாகும். அவுத்திரலாசியா, வட அமெரிக்கா ஆகியவற்றின் சந்தைப் பங்குகள் மாற்றமுருது விளங்கின.

சுற்றுலாக் கைத்தொழிலிலிருந்தான மதிப்பிடப்பட்ட மொத்த வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் 1984 இல் ரூ. 27,380 இலட்சமாக விளங்கி (சிஎஉ 1,050 இலட்சம்) முன்னைய ஆண்டைவிட 5 சதவீத வீழ்ச்சியைக் (சிஎஉ நியதிகளில் 9 சதவீதம்) காட்டி, நோக்க ரீதியில் சுற்றுலா வருகைகளைப் பரிசீலிக்கும்போது ''களியாட்டம்'' 1983 இன் 91 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1984 இல் மொத்த வருகைகளில் 95 சதவீதமாக விளங்கி அதிகூடிய பங்கைக் கொண்டிருந்தது. 1983 இன் 5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1984 இல் வியாபார நோக்கங்களுக்கான பயணம் 3 சதவீதத்திற்கு மட்டுமே வகை கூறியது.

முன்னைய ஆண்டுகளைப் போலவே 1984 இலும் இலங்கைக்கான போக்குவரத்தின் முக்கிய வகையாக வான்மூல வருகையே விளங்கியது. வான்மூலம் வருகைதந்த மொத்தப் பயணிகளில் பிரதேசங்களுக்கிடையேயும் வெளியேயுள்ள அட்டவணைப்படுத்தப்பட்ட பறப்புக்களில் வருகைதந்தோர் 79 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் பயணிகளில் 17 சதவீதத்தினர் ஒப்பந்த அடிப்படையிலான பறப்புக்களில் வருகைதந்தனர். கடல்வழி சுற்றுலா பயணிகளின் வருகை 1983 இன் 12 சதவீதத்திலிருந்து 1984 இல் 4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

சுற்றுலா அதிகளவான நேர்முக, மறைமுகத் தொழில் வாய்ப்புக்களைப் பணிகள் துறையில் வழங்குகின்றது. 1983 இன் 11 சதவீத அதிகரிப்புடன் ஒப்புநோக்குகையில் 1984 இல் சுற்றுலாத் தொழிலின் மூலம் வழங்கப்பட்ட தொழில் வாய்ப்புக்களின் மொத்த எண்ணிக்கை 59,500 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. நேர்முக தொழில் 1983 இன் 22,400 இலிருந்து 1984 இல் 24,600 ஆக 10 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. சுற்றுலாவினுல் அதனுடன் தொடர்பான் பலவகைப் பணிகளில் உருவாக்கப்பட்ட மறைமுகத் தொழில்கள் 1984 இல் 34,900 ஆக மதிப்பிடப்பட்டதோடு இது 1983 இனைவிட 12 சதவீதம் அதிகமானதாகும்.

தரப்படுத்தப்பட்ட வதிவிடத் துறையின் அளவு 1983 இன் 138 பிரிவுகளிலிருந்து 1984 இல் 146 பிரிவுகளுக்கு அல்லது 6 சதவீதத்தால் அதிகரித்தது. இது 1974 இலிருந்து 1983 வரையான காலப்பகுதியில் தரப்படுத்தப்பட்ட வதிவிடப் பிரிவுகளின் எண்ணிக்கையின் 10 சதவீதமான சராசரி ஆண்டு வளர்ச்சியுடன் ஒப்பிடத்தக்கது. தரப்படுத்தப்பட்ட வதிவிடத்துறையிலுள்ள அறைகளின் மொத்த எண்ணிக்கை 1983 இன் 8,852 இலிருந்து 1984 இல் 9,627 ஆக உயர்ந்தது. தரப்படுத்தப்பட்ட விடுதிகளில் அறையில் தங்கியிருப்போர் சராசரி வீதம் 1983 இல் இருந்ததுபோல 36 சதவீதமாக விளங்கியது. துணை வதிவிடத் துறையில் கிடைக்கத்தக்க மொத்த அறைகளின் எண்ணிக்கை 1983 இன் 1,251 இலிருந்து 1984 இல் 1,270 இற்கு சிறிதளவால் அதிகரித்தது. தரப்படுத்தப்பட்ட வதிவிடத்துறையைப்போலவே துணைத்துறையிலும் அறையில் தங்குவோரின் சராசரி வீதம் மீளாய்வின் கீழுள்ள ஆண்டிலும் மாற்றமுறாதிருந்தது. தங்கியிருக்கும் வீதத்தில் காணப்படும் உறுதியான் தன்மை முன்பு கூறப்பட்ட சுற்றுலாப்பயணிகளின் குறைந்த காலத் தங்கியிருப்பைப் பிரதிபலிக்கின்றது.

கடந்த காலங்களில் அவதானிக்கப்பட்ட போக்கிற்கு இசைவாக, 1984 இல் தரப்படுத்தப்பட்ட வதிவிடத்துறையின் பிராந்திய ரீதியான பகுப்பு கொழும்பு நகரத்தினதும், கொழும்பு பெரும்பாக பகுதியிலும் தங்கியிருப்போர் வீதங்கள் முறையே 45 சதவீதமாகவும் 38 சதவீதமாகவும் விளங்கியதைக் காட்டின. எனினும் 1983 உடன் ஒப்பிடுகையில் இவ்வெண்தொகைகள் முன்னையதில் 7 சதவீதப் புள்ளிகளிலான வீழ்ச்சியையும், பின்னையதில் 2 சதவீதப் புள்ளியிலான வீழ்ச்சியையும் காட்டின. தரப்படுத்தப்பட்ட வதிவிடத்தின் அதிகூடிய அளவைக்

கொண்ட தென்கரை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1984 இல் தங்கியிருப்பு வீதம் 34 சதவீதமாக விளங்கி 2 சதவீதப் புள்ளியிலான சிறிதளவு அதிகரிப்பைக் கொண்டிருந்தது. மலைநாட்டு, புராதன நகர பிரதேசங்கள் 1984 இல் முறையே 32 சதவீத, 31 சதவீத தங்கியிருப்போர் வீதங்களைக் கொண்டிருந்தன. முன்னைய ஆண்டின் 11 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் அதிகுறைந்த தங்கியிருப்பு வீதமான 6 சதவீதம் வட பிராந்தியத்தில் அவதானிக்கப்பட்டது.

சுற்றுலாத்துறையினைப் பழைய நிலைக்குக் கொண்டுவரும் நோக்கில் சுற்றுலாச் சபை அதன் உடன் பயனளிக்கத்தக்க நிகழ்ச்சித் திட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி மீளாய்வின் கீழுள்ள ஆண்டில் வெளிநாட்டில் அபிவிருத்தி வேலைகளுக்காக ஏறத்தாழ ரூ. 490 இலட்சம் செலவிட்டது. வர்த்தக வங்கிகளாலும் ஏனைய நீண்ட தவணை கொடுகடன் நிறுவனங்களாலும் விடுதிச் செயற்றிட்டங்களுக்காக வழங்கப்பட்ட கடன் வசதிகளை மீள அட்டவணைப் படுத்துதல் சுற்றுலா நடவடிக்கைகளின் வீழ்ச்சியினால் விடுதி நடத்துநர் எதிர் கொள்ளும் நிதிச் சிக்கல்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்குடன் மொத்த விற்பனவு வரியை 10 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்குக் குறைத்தல் போன்ற வற்றின் மூலம் பல சலுகைகளையும் அரசு இக்கைத்தொழிலிற்கு வழங்கியது.

## சென்மதி நிலுவை

நடைமுறைக் கணக்குப்பற்றுக்குறையில் ஏற்பட்டுள்ள கணிசமானளவு குறைப் பானது 1984 இல் சென்மதி நிலுவையில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தினை ஏற்படுத்தியது. நடைமுறைக் கணக்குப் பற்றுக்குறையில் ஏற்பட்ட குறைப்பானது, வர்த்தகமாற்று விகிதங்களின் நியதிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினதும், வெளிநாட்டுத் தனியார் பணவனுப்பல்களில் ஏற்பட்ட மேலதிக அதிகரிப்பினதும் விளைவாகும். நடைமுறைக் கணக்குப்பற்றுக் குறையானது 1983 இன் ரூ. 111,220 இலட்சத்திலிருந்து (சிஎஉ 4,410 இலட்சம்) ரூ. 7,890 இலட்சத்திற்கு (சிஎஉ260 இலட்சம்)குறைக்கப்பட்டது.1984 ஆண்டுக்காலத்தில் வணிகத்துறையின் வர்த்தக நிலுவையில் ஒரேயளவான முன்னேற்றம் காணப்பட்டது.சிஎஉ நியதிகளில் ஏற்று மதிகள் 45 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்துள்ள வேளையில் இறக்குமதிகள் 1.7 சதவீதத்தால்சிறிதளவு அதிகரித்துள்ளன.நடைமுறைக் கணக்குப் பற்றுக்குறை யானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக 1983 இன் 9.1 சதவீதத்தில் இருந்து 1984 இல் 0.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அலுவல்சார் மாற்றல் கள் தவிர்ந்த நடைமுறைக் கணக்குப் பற்றுக்குறை 1983 இன் ரூ. 151,380 இலட்சத்துடன் (சிஎஉ 6,010 இலட்சம்) ஒப்பிடுகையில் ரூ. 46,920 இலட்ச மாகவும் (சிஎஉ 1,760 இலட்சம்) மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான, அதன் விகிதமானது இவ்விரு ஆண்டுகளுக்கும் இடையில் 12.4 சதவீதத்திலிருந்து 3.1 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது.

வணிக ஏற்றுமதிகளில் இருந்தான வருவாய்கள் பொருட்களின் அளவு களிலும் விலைகளிலும் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவாக 1983 இன் ரூ. 250,380 இலட்சத்திலிருந்து (சிஎஉ 9,930 இலட்சம்) 1984 இல் ரூ. 374,530 இலட் சத்திற்கு (சிஎஉ 14,390 இலட்சம்) அதிகரித்தது. தேயிலையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் மட்டும் ரூ. 74,690 இலட்சத்தினால் (சிஎஉ 2,750 இலட்சம்) அதிகரித்தன. மூன்று முக்கிய மரபு ரீதியான ஏற்றுமதிப் பொருட்களில் இருந்தான கூட்டு ஏற்றுமதி வருவாய்கள் 1984 இல் ரூ. 80,620 இலட்சத்தால் (சிஎஉ 2,910 இலட்சம்) அதிகரித்தன. ஏற்றுமதியைப் பொறுத்தவரை ஒரு குறிப்பிடத் தக்க தன்மையாக, புடவைகள் தைக்கப்பட்ட ஆடைகள், மற்றும் ஏனைய